உ
சிவமயம்

# இந்து சாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

# HINDU ORGAN

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

பிரதி விலை: சதம் 20.

ஆரம்பம்: விரோதி ஸு (1889) ஆவணிமீ 28-ம் உ. அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத் - ௯0] யாழ்ப்பாணம்- காலயுத்தி ஸு வைகாசி மீ உ௬ - ௳ வெள்ளிக்கிழமை (9 6 - 1978) [இல - அ

மாவையில்

# இன்று நிகழும் மகா கும்பாபிஷேகம்

[ பிரம்மஸ்ரீ து. சண்முகநாதக் குருக்கள் ]

யுகதர்மங்களுள் கலியுகம் மிகவும் பொல்லாதது. மக்கள் அசுரகுணங்கொண்டு அரக்கர்களாகவும் அலைவும் நேரிடும், அசுரர்களை வதம்செய்து தேவர்களுக்கு நல்வாழ்வு தந்து, ஜெகத்தைத் திருமகள் உலாவும் புண்ணிய பூமியாக்கிய கந்தப்பெருமானை, "கலியுகவரதர்" எனவும் வேதங்கள் வாழ்த்துகின்றன



இக்கலியுகத்திலே கண்கண்ட தெய்வமாகக் கந்தசுவாமியார் இவ்வுலகின்கண் பல திருக்கோவில்களிலே வீற்றிருந்து நல்லருள் பாலிப்பதை மக்கள் காண்கின்றனர். திருச்செந்தூர் கோவிலைப்போன்று ஈழநாட்டிலே இளவரசி மாருதப்புரவீகவல்லியால் ஸ்தாபிக்கப்பட்ட மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலைச் சிதம்பரம் தீக்ஷிதர் பெரிய மனத்துள்ளார் வழித்தோன்றலான குமாரவேலர் சபாபதிக் குருக்கள் அவர்கள் புனர்நிர்மாணம் செய்கையில், எக்காலமும் பிரணவ ஒலி ஒலித்து வேண்டுவோர் வேண்டுவதைப் பெறத்தக்கதான வல்லமை பொருந்திய திருவருட் சக்தி நிறைந்த ஸ்தலமாக மாவிட்டபுரம் கோவில் அமையவேண்டுமென்ற சிந்தனையில் ஈடுபட்டிருந்தார் அவரது சிந்தனை இப்போது சிறிது சிறிதாக நிறைவு பெற்று வருகிறது:

1927 ஆம் வருடம் மூலஸ்தானம். அர்த்தமண்டபம் ஆதியன கருங்கற்களால் நிர்மாணிக்கப் பட்டன. அன்றிலிருந்து மகாமண்டபம் உரிய அமைப்பில் இல்லாதிருந்தது. எவ்வளவோ பிரயத்தனம் செய்தும் மகாமண்டபத்தைக் கருங்கற்களால் பூர்த்தியாக்க முடியாதிருந்தது, 1977ம் ஆண்டு தைமாதம் இலட்சார்ச்சனை ஆரம்ப தினத்தன்று ஓர் முருகபக்தர் மகா மண்டபத்தின நிலையை அவதானித்து வெகு விரைவில் அதனைப் பூர்த்தியாக்கும் பொருட்டுப் பெருநிதி தந்துதவினர். "முழுமையான திருக்கோவிலினுள்தான் முருகப்பெருமான் பெருமகிழ்வுடன் வீற்றிருந்து பேரருள் புரிவான்" - என சாஸ்திரங்கள் கூறும், அத்தகைய ஓர் திருக்கோவிலின நிர்மாண அமைப்பிலேதான் மகாமண்டபம் பூர்த்தியாகிறது இந்த வைபவத்தை முன்னிட்டு உலகின கண்காணப்பெறும் ஜீவராசிகள் அனைத்தும் நல்வாழ்வு பெறவும், கலியுகத்திற காணப்படும் இடர்கள் நீங்கவும், உலகில் நல்லரசு தோன்றவும், மக்கள் யாபேரும் நல்லறம் புரிந்து புண்ணிய சீலர்களாக வாழவும், வான்முகில வழாது பெய்யவும் மாவைக் கந்தசுவாமியாருககு (இன்று) 9-6-1978 வெள்ளிக்கிழமை சதுர்த்தித் திதியும் புனர்பூச நட்சத்திரமும் கூடிய தினததிலே அஷ்டோத்தர சகஸ்ர மகாசங்காபிஷேகமும், உற்சவமும நடைபெறத் திருவருள் பாலித்திருக்கிறது.

முற்பகல் 11-30 மணிக்கு சங்காபிஷேக உற்சவ மலர் வெளியீடு நிகழும். சிவத்தமிழச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள், பண்டிதர் இ. நமசிவாயதேசிகர் அவர்கள் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் முதலானோர் மாலை நிகழ்ச்சியில் கலந்து உரை நிகழ்த்துவர். மதுரை திருப்புகழ் தவமணி தியாகராசன் குழுவினர் திருப்புகழ் இன்னிசை விருந்தளிப்பர்.

## நல்லைக் குருமணிக்கு வரவேற்பு

நல்லை ஆதீனம் குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ பரமாசாரிய சுவாமிகளுககு வரவேற்பு விழா இன்று மாலை 5 மணிக்கு நல்லை ஆதீனத்தில் நிகழ சுவாமிகளின் அன்பர்கள ஒழுங்கு செய்துள்ளனர் இவ்விழாவில் பல அறிஞர்கள் உரை நிகழ்த்த உள்ளனர்.

கடந்த 8 மாசங்களுக்கு மேலாக மலேசியா, சிங்காபுரி முதலாம் இடங்களில் பல மாகாணங்களுக்கும் சுற்றுப் பயணம் செய்து ஆங்காங்கு சமயச் சொற்பணி ஆற்றிவிட்டு தாயகம் திரும்பியுள்ளார்கள்.

மலேசியா பேரருள் வள்ளல் N. T S. ஆறுமுகம் பிள்ளை அவர்களால் ஆதினத்திற்கென அன்பளிப்புச் செய்யப்பெற்ற ஒலி பெருக்கிச் சாதனத்தை யாழ். மாநகர ஆணையாளர் க. சிவஞானம் அவர்கள் இயக்கி வைப்பார்கள்.

இவ்விழாவில் திருப்புகழ் இன்னிசை விருந்து இடம பெறும். இந்நிகழ்ச்சியை மதுரை திருப்புகழ்தவமணி K. V. தியாகராசன் குழுவினர் அளிக்க இருக்கின்றார்கள்.

### நாயன்மார்கட்டில்

இந்நிகழ்ச்சியை யடுத்து இரவு 8-30 மணியளவில் நல்லைக் குருமணியவர்களுக்கு நாயன்மார் கட்டில் வரவேற்பளிக்கப் பெறும் யா, நா. சண்முக நிலைய 3 ஆவது ஆண்டு விழாவில் சுவாமிகள் அருளுரை வழங்குவார்கள்.

### கொழும்பு மாநகரில் இன்னிசை அருள் உரை

கொழும்பு ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில எதிர்வரும் 12ந் தேதி முதல் 20 தினங்கள் வரை சுவாமிகளின் இன்னிசை அருளுரை நிகழும்.

## சாகர தீர்த்தமகிமை நிகழும் நாகம்மாள் பெருவிழா

6 - 6 - 78 கொடியேற்றம்
19 - 6 - 78 தேர்த் திருவிழா
20 - 6 - 78 தீர்த்தத் திருவிழா

சப்த தீவகத்தில் சப்த சமுத்திர சங்கம புண்ணிய தீர்த்த மத்தியில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ நாக பூஷணி அம்மையின் காருண்யம் பெறப் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் பெருந் திருவிழாக் காலத்திற் கூடுவர்.



நாளாந்தம் தரிசனம் செய்யும் அடியார்களோ நூற்றுக் கணக்கானோர்.

சரித்திரப் பெருமை வாய்ந்த இத் தலம் இந் நாட்டின் கலங்கரைவிளக்கமாக இலங்குகின்றது.

சர்ப்ப தரிசனத்துக்குரிய இக் கோயில் நிகழ்ச்சிகள் இயற்கை வனப்புக் கவின் பொதிந்தன,

இக் கோயில் ஆதீன குருக்கள் வேத சிவாகம வித்வ மேன்மைச் சிவதிருவாளர்.

## திருமுறை தந்த குரவர்களின் சிறப்புரைத்த தெய்வீகச் சேக்கிழார் சுவாமிகள்



சுந்தரமூர்த்திநாயனாரும் சேக்கிழார் அடியாரும் ஒன்றிணைந்த நோககத்தினால் ஆக்கம் தரும் திருத்தொண்டத் தொகையையும் திருத்தொண்டர் புராணத்தையும் முறையே தந்தருளினர். குரவரைப் போற்றுதல் குரவர் போற்றும் திருவருளைப் போற்றுதல் ஆகும்:

அறுபத்துமூவர் குருபூசை நாட்கள் எவ்வாறு அடியார்களின் உள்ளத்தில் அருள் ஒளியைப் பரப்புகின்றனவோ அவ்வாறே அறுபத்து மூவரையும் அயரா அன்பினால் ஏறிப் புகழ்ந்து அவர்கள் வரலாற்றை அரிய பெரியபுராணமாகத்

[வளர்ச்சி 4-ஆம் பக்கம்]

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம ரனாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

காலயுத்தி ௵ வைகாசிமீ ௨௬ ௳ வெள்ளி

## கோயிற் பிரகாரம் தூய நிகழ்ச்சிக்கே

காலப் போக்கென்ற காரணத்தைச் சொல்லிக் கொண்டு கலையென்ற போர்வையிலே கோயில்களிலே விசேட நிகழ்ச்சிகளாகக் கலகலப்புக்குரியனவற்றைக் கைக் கொள்வது சமய நெறிக்கலையாது.

நாவலர் ஐயா ஆலயங்களில் ஆபாசமான நிகழ்ச்சிகள் நடைபெறுவதை மிகக் கடினமாகக் கண்டித்துப் பிரசாரஞ் செய்தார் என்பதை இக்காலத்து மக்கள் அறிதல் வேண்டும்.

நடன மாதரின் இசை நிகழ்ச்சிகள் முற்றிலும் சமய ஒழுக்கத்துக்கு மாறாகும் என்று நாவலர் பெருந்தகை எடுத்துக் காட்டி இந்நிகழ்ச்சிகள் கோயில்களிலே ஒவ்வாதன என்று வற்புறுத்தினர்.

அவரின் பின் நாரியர் நடனங்களோடு மேலும் அநாகரிகமான நிகழ்ச்சிகள் இடம்பெற்று வரலாயின

இக்காலத்திலோ இன்னுங் கூடுதலாகக் கேலிக் கூத்துகளும் நுழைந்து விட்டன.

ஆலய வழிபாடு எவ்வாறமையவேண்டும் என்று பிரமாணங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. சரியை கிரியை என்ற பாதங்களிலே நிற்கின்றவர்கள் கோயிலில் வணங்கும் முறையை அறிவார்கள். அவ்வாறில்லாத பாமர மக்கள் கும்பிடுதலோடு கூத்து முதலிய பொழுது போக்கு நிகழ்ச்சிகளையும் விரும்புவது சகசமாகும. ஆனல் அவ் வகையினருக்கு முன் மாதிரியாக ஆலய பரிபாலனம் சைவத் துறையின் இலக்கணத்துக்கமைய நடைபெற்ருல் பொது மக்கள் நல்லொழுக்க நெறியைக் கோயிலிலும் மற்ற இல்லங்களிலும் கைக்கொள்ளப் பழகுவார்கள்.

விழாக் காலங்களிலே திருமுறை இன்னிசையும் திருத்தொண்டர் வரலாற்று விரிவுரையும் விசேட நிகழ்ச்சிகளாக அமைவதே முறை. அங்ஙனமில்லாது இசை நிகழ்ச்சிகள் என்ற துறையில் பன்னிரு திருமுறைகளுக்கப்பாலுள்ளவற்றையும நாடக மேடைக்கென வுள்ள பாடல்களையும் சேர்த்தல் விழாவின் புனிதத் தன்மையைக் கெடுத்துவிடும என்பதை உபயகாரர் உணருதல் வேண்டும்.

திருமுறை இன்னிசை நிகழ்த்தும் கலைஞர்களை அவற்ருேடு திரைப்படத் தெந்தனுப் பாட்டுகளையும் பாடும்படி கேட்பதுவும நிகழ்த்துவிப்பதுவும் அந்த அறிஞர்களை அவமதிப்பதன்றி ஆலய வழிபாட்டைக் கேலி செய்வதுவுமாகும்,

வேத சிவாகம விதிகளின்படி விழாக்கள் நடைபெறும் புகழ் வாய்ந்த கோயில்களை முன் மாதிரியாக வைத்து ஏனைய ஆலயங்களும் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வது முறையாகும். இது இன்று அவசியமுங்கூட.

திருமுறைகளெல்லாம் தெய்வ சங்கீதச் சிறப்புடையன; இறை அன்பைக் கூட்டும் வகையிலே தெவிட்டாத இன்பத்தைக் கொடுப்பன; கருங்கல் மனத்தையும் கசியவைப்பன. கவலையைப் போக்குவன. இவற்றை அநுபவித்துவிட்டு அதேதாற்போல உலக போக உணர்ச்சிக்குரிய இசையைக் கேட்ப தென்ருல் நீராடப்போய்ச் சேருடிஞற்போலல்லவா முடியும்? கரும்பிருக்க இரும்பு கடிப்பாரும் உண்டா?

"பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின்
அருமைக்கும் ஒப்பின்மை யான்"

---

சமயகுரவர், சந்தானகுரவர்
குருபூசைகள்

குரவர்—1
சேக்கிழார் பெருமான்

## சைவத்துக்குப் பாகமாயமைந்த தமிழ்

## சேக்கிழார் செம்மொழிகளிற் சிறக்கின்ற திவ்வுண்மை

சமய சந்தான குரவர்களின் குருபூசைகள் மிக மிகச் சிரமமாகவும், ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் நடாத்தும் நாடு சைவங் கொழிக்கும் திருநாடு யாழ்ப்பாணம்,

தமிழ் மொழியின் பெருக்கத்திற்கு வகை வகுப்பன இதிகாசங்கள். புராணங்கள் திருமுறைகள் முதலியன.

இதில் அடக்கம் சேக்கிழார் பெருமானல் அருளப்பெற்ற பெரியபுராணமென்னும் திருத்தொண்டர் புராணம்

தெய்வ மணம் கொழிக்கும் தார்மிகச் செந்தமிழ் புராணம் இது.

ஆணுமாய், பெண்ணுமாய் அலியுமானனிடத்தில பக்தி நெறியில் நின்று பரஞானம் பெற்ற தொண்டர்களின் புராணங்களைச் சொல்வது இப்புராணம்.

தமிழ்த்தெய்வம் சிவன் "தோடுடைய செவியன்" என அனைத்த மாமறை முதல். கலைகலமும் ஓதா

வைத்தியகலாநிதி
நா. கனகரத்தினம்
(சித்தாந்த பண்டிதர்)

துணர்ந்த விரகன்"; "மூற்றுமான வன்ஞானமே மூலைக்கரத்தூட்டப் பெற்ற பாலருவாயன்" என்பன போன்ற தேன் சொட்டும் பால்கொட்டும் செந்தமிழால் சேக்கிழாரால் எடுத்தோதப்பட்ட திருஞான சம்பந்தரால் எடுத்துரைக்கப்பட்ட பரம்பொருள் சிவன். ஆகையால் அவன்

"அம்மை அப்பன்" அம்மை அப்பன் போன்றதே சைவமும் தமிழும். சைவத்திற்கு குண்டலமும் தமிழுக்குத் தோடும் அணியப்பெற்று ஒரு தெய்வமாக்குவோம்.

சைவமே தெய்வமென்ருல தமிழையே இணைந்த தெய்வமாக்குகிருர் சிவனருள் பெற்ற சேக்கிழார்.

மாது பாகனுகிய தமிழ்த் தெய்வம் போலத் தமிழைப் பாகமாகக் கொண்டது சைவம், இவ்வுண்மையைத் தமிழ்ப் புராணங்களுக்குத் தலையாய பெரிய புராணத்திலிருந்து கொள்ளலாம்.

திருத்தொண்டத் தொகையை வகையாக்கித் திருவந்தாதி செய்தார். பொல்லாப்பிள்ளையாரின் அருள் பெற்ற நம்பியாண்டார் நம்பி.

இத்தொண்டர் சரித்திரங்களை முதல்மந்திரியாகிய

சேக்கிழார் தம்மை வேண்டிக் கேட்ட சமண நூலாகிய சிந்தாமணியில் நம்பிக்கை கொண்டவனுகிய அநபாய சோழ மன்னனுக்கு எடுத்துக் கூற இலறறின் உண்மைகளை மெய்யாகக் கொண்ட அரசன் தொண்டர் புராணத்தைப் பாடச் சேக்கிழார்க்கு வேண்டிய உதவிகளைச் செய்தான்,

சேக்கிழார் பெருமான் தில்லை அம்பலவாணர் அருள்பெற்று நடேசப் பெருமானே

"உலகெலா முணர்ந்தோ
தற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்
தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி
வணங்குவாம்

என நடேசர் துதி பாடி

புராணத்தைப் பாடத்தொடங்கினர் சித்திரைதிருவாதிரையில்தொடங்கிய விருத்தங்கள் மறு ஆண்டு சித்திரைத் திருவாதிரையின் முன் முடிவுற இத்திவ்விய நட்சத்திரமாகிய நடேசப் பிரானது திருநாமத்துக்குரிய திருநாளும், திருஞான சம்பந்தநாயனர் திருவவதாரஞ் செய்த திருநாளும் அவர் அமுது ஞானப்பாலுண்ட திருநாளுமாகிய

---

### நாவலர் நூற்றுண்டு நினைவு

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலப் பெருந்தகையின் நூறுவது சிரார்த்ததின அநுட்டிப்பு வைபவங்கள் யாழ் நாவலர் மகாவித்தியாலத்தில் சிறப்புற நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வித்தியாலயத்தில் ஒரு இலட்சத்து இருபதினுயிரம் ரூபா செலவில் அமையவிருக்கும் புதிய மாடிக் கட்டடமும் பொலிவுற்று விளங்கவுள்ளது,

### குருநாகலில்

குருநாகல் சைவ மகா சபை ஆதரவில் சேக்கிழார் விழா ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தில் நாளைமாலை 7 மணி முதல் கொண்டாடப்படும். விசேட அபிஷேக ஆராதனையும் பக்திப் பாடல்களும் இடம்பெறும்.

திருவாதிரையில் புராணத்தை அரங்கேற்றினர்.

நாலாயிரத்து இருநூற்று ஐம்பது விருத்தங்களைக் கொண்ட புராணத்தை ஓர் ஆண்டு காலத்தில் உலகுக்கு அருளிய பெருமையைச் சொல்ல வல்லவர் உமாபதி சிவாசாரியரேயல்லது எமக்கும் வன்மை உண்டோ,

"சங்கரன் தாள் சிரங்கொள் திருத்தொண்டர் புராணத்தை அளவிட நஞ் சேக்கிழார்க் (கு) எளிதலது தேவர்க்குமரிதே"

என்கிருர் சிவாசாரியர் சேக்கிழார் பாதமலர் தலைக்கணிந்து பரவுவோம் திருத்தொண்டு.

---

திருநீலகண்ட யாழ்ப்பாணர்

## பொற்பலகை பெற்ற வரலாறு

சம்பந்தப்பெருமானுர் திருவாய்மலர்ந்த திருத்தோத்திரங்களைத் தமது யாழில் இசைமீட்டுத் தாமும் கேட்போரும இன்புறத் திருத்தொண்டாற்றிய திருநீலகண்ட யாழ்ப்பாணரின் சிவநெறியைத் திருவாலவாய்த் திருப்பதிகங்களில் ஒன்ருகிய 'திருஇயமகம்' எனும பதிகத்தில்,

"நக்கமேகுவர் நாடுமோ ருருமே
நாதன்மேனியின் மாசுணமுருமே
தக்க பூமனைச் சுற்றக் கருளொடே
தாரமுய்த்தது பாணற் கருளோடே
மிக்க தென்னவன் றேவிக் கணியையே
மெல்ல நல்கிய தொண்டர்க் கணியையே
அக்கினரமு துண்கல னோடுமே
ஆலவாயர னுமை யோடுமே"

என வருவதில் 'பாணர்க்கருளோடே' என்ற குறிப்பானது திருநீலகண்ட யாழ்ப்பாணரைப் பற்றியது.

இந்தத் தேவாரம் திருநீலகண்ட யாழ்ப்பாணர் பொற்பலகை பெற்ற திருவிளையாடலைச் சுட்டிக் காட்டுகின்றது.

திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருவாலவாயைத் தரிசிக்கச் சென்ற சமயம், பரமசிவனுர் அடியார்களுக்குக் கனவிற்ருேன்றி யாழ்ப்பாணரைக் கோயிலுக்குள் அழைத்து வரும்படி குறிப்புக் காட்டியதும் பின்னர் யாழ்ப்பாணர் பண்ணிசையோடு பரமனைப் பாடப் பெருமானுர் பொற்பலகை அளித்ததும் சரித்திரமாகும்.

"மன்னும் நிறையினர்" எனத் திருஞானசம்பந்த சுவாமிகளாலே ஏத்திப் பாடப்பெற்ற திருநீலகண்ட நாயனரின் குருபூசையும் வைகாசி 10-ம் நாள்.

அந்நாயனர் வாழ்ந்த இடத்தையும் (சாத்தமங்கை) அங்குள்ள திருத்தலமாம அயவந்தியையும் சம்பந்த சுவாமிகள குறிப்பிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

"நடமணம் மல்கி நாறும் சமழும் பொழில்
சாத்தமங்கை
அடிகள் நக்கன் படிவ அயவந்தி அமர்ந்தவனே"

மறையினர் மல்குகாழித் தமிழ்ஞான சம்பந்தன் மன்னும்
நிறையினர் நீலநக்கநெடு மாநகரென்று தொண்டர்
அறையுமூர் சாத்தமங்கை அயவந்தி மேலாய்ந்த பத்தும்
முறைமையா லேத்தவல்லா ரிமையோரிலும் முந்துவரே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் சிகாமணி பிரம்மஸ்ரீ கா. அப்பாச்சாமி ஐயர் அவர்கள் இயற்றிய

# நகுலகிரிப்புராண மூலமும்

இளைப்பாறிய தலைமையாசிரியர்
திரு. செ சிவசுப்பிரமணியம் அவர்கள் எழுதிய

# உரையும்

அணிந்துரை
( முன் வளர்ச்சி — 3 )

கீரிமலைச் சிவன்கோவில் என வழங்கும் நகுலேசுவரர் ஆலயத்துக்கு யான் இளமைப் பருவந் தொடக்கம் இடையிடையே போய்வந்ததுண்டாயினும், யான் இல்வாழ்க்கையிற் புகுந்த 1933ம் ஆண்டின் பின்னரே அதிகமாகப் போகத் தொடங்கினேன். அக் காலத்திலே பிரமஸ்ரீ தி குமாரசாமிக் குருக்கள் அவர்கள் கோயிலின் ஆதீனகர்த்தாவாகவும் பிரதம குருக்களாகவும் விளங்கினார்கள். அவர்களது கட்டளைப்படி மாதந்தோறும் முதல் ஞாயிற்றுக்கிழமைகளிற் கோவிலுக்குச்சென்று பூசையும் அர்ச்சனையும் செய்வித்து வழிபட்டு வந்தேயாம். தென்னிலங்கைத்திருகனால்வேயப் பட்டுத் திக்கிரையான தம்ப மண்டபமும், உட்பிரகாரச் சுற்றுக்கொட்டகைகளும் அக்காலத்திலேதான் குருக்கள் அவர்களின் அயரா உழைப்பினாலும், சைவப் பெருமக்களின் உதவியாலும் திருத்தஞ் செய்யப்பட ஆரம்பிக்கப்பட்டது.

திருவெம்பாப்பூசைகாலத்திலே இக்கோயிலிலே திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி என்பன படித்தல், திருவாதவூரடிகள் புராணம் வாசித்தல் ஆகிய தொண்டுகளை எமது சகலன் திரு. க சிற்றம்பலம் என்பவர் தமது தகப்பனார் பேரன் முதலியவர்கள் செய்து வந்தது போலவே தாமுஞ் செய்ய வேண்டுமென்ற விருப்பத்தினாலே அதிகாலையில் எழுந்து செல்வதுண்டு. யானும் அவரோடு சேர்ந்து செல்லத் தொடங்கிய காலத்தில் கருகம்பனையில் இருந்த திரு. ந. சங்கரப்பிள்ளை உபாத்தியாயர் என்பவரே திருவாதவூரடிகள் புராணத்துக்கு உரைகூறிவந்தார். யானும் புராணபடனத்திற் பங்குபற்றி வந்தேன். சில காலங்களின் பின்னர் திரு. ந. சங்கரப்பிள்ளை உபாத்தியாயர் அவர்கள் நோய்வாய்ப்பட்டுத் தேகவியோகம் ஆயினர். அதன் பின் திருவாதவூரடிகள் புராணத்துக்கு உரை கூறும் பொறுப்பு என்னை வந்து சேர்ந்தது. எம்பெருமான் திருவருளால் அத்தொண்டினைத் தொடர்ந்து செய்து கொண்டே வருகிறேன்.

1947ஆம் ஆண்டில் பிரமஸ்ரீ தி. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் அகாலமரணம் அடைந்து விட்டார். சிறிது காலம் கோயிலின் வளர்ச்சி தடைப்பட்டிருந்ததாயினும், பின்னர் அவரின் சிரேஷ்ட புத்திரராகிய பிரமஸ்ரீ கு. நகுலேசுவரக் குருக்கள் அவர்கள் தந்தையாரிலும் கூடிய ஊக்கமெடுத்துக் கட்டட வேலைகளை நிறைவேற்றுவித்ததோடு கும்பாபிஷேகமுஞ் செய்வித்துத் திருவிழாவையும் ஆரம்பித்து நடாத்தி வரலாயினர். சோமவாரந் தோறும் அபிஷேகம் திருவிழா என்பனவும் நடைபெறத் தொடங்கின. பெரியபுராணம் திருவிளையாடற்புராணம் என்பனவும் படிக்கப்பட்டு வந்தன. தலபுராணமாக விளங்கிய நகுலகிரிப் புராணத்தையும் படிக்க வேண்டுமெனப் பலர் விரும்பியமையாலும் முதற் பதிப்பில் வெளியான புத்தகங்கள் குறைந்து போனமையாலும் கீரிமலை இந்துசமய விருத்திச் சங்கத்தினர் 1941 ஆம் ஆண்டில் இந்நூலை இரண்டாம் பதிப்பாக வெளியிட்டனர். இம்மூன்று புராணங்களும் ஒன்றன் பின் னொன்றாகச் சோமவாரந் தோறும் படிக்கப்பட்டு வருகின்றன. பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை அவர்கள் பண்டிதர் மு. கந்தையா அவர்கள் பிரமஸ்ரீ வ. குகசர்மா அவர்கள் சைவப் பெரியார் சி. நாகலிங்கம் அவர்கள் முதலிய பல பெரியார்கள் இப் புராணங்களுக்கு உரை கூறிவந்தார்கள். அவற்றைத் தொடர்ந்து கேட்டு வந்துள்ளேன்.

கீரிமலைச் சிவன்கோவிலின் தலபுராணமாகிய நகுலகிரிப் புராணத்துக்கு உரை ஒன்றிருந்தால் நல்லதென் ஒரு விருப்பம் என் மனத்தில் எழுந்தது. அவ் விருப்பத்தைச் சிலரிடம் தெரிவித்தும் அதனைச் செய்ய ஒருவரும் முன்வரவில்லை. எனவே நகுலேசுவரப்பெருமானது திருவடிகளையே துணையாகக்கொண்டு அடியேன் உரை எழுதத் தொடங்கினேன். பெருமானது திருவருளால் இடையூறேதுமின்றி உரை இனிது நிறைவுற்றது. மகாஜனக்கல்லூரி ஆசிரியரும் எமது அன்பருமாகிய திரு செ. கதிரேசர்பிள்ளை அவர்கள் முதலில் எமது உரையைப் பார்வையிட்டு வேண்டிய திருத்தங்கள் செய்துதவினார்கள். அவருக்கு எமது மனப்பூர்வமான நன்றி உரியதாகுக.

செ. சிவசுப்பிரமணியம்
விழிசிட்டி
தெல்லிப்பழை, 1-5-78

( வளரும் )

## அறநெறி அமுதம்

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது கடவுளை வழிபட்டு முத்தியின்பம்பெறும் பொருட்டேயாம்.

— நாவலர்

## சமயக்கல்வி கட்டாயமானது

க. பொ, த. ப. (சா, த.) பரீட்சைக்கு சமயபாடம் கட்டாய பாடமாக்கப்பட வேண்டுமென்ற கல்விச் சீர்திருத்தக் குழுவினரின் பரிந்துரையைக் கௌரவ கல்வி அமைச்சர் திரு. நிசங்கா விஜயரத்தினு அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

கல்வி அமைச்சரின் சமயக்கல்விக் கட்டாய போதனைக் கொள்கை சிறப்பாக நிறைவேற்றப் படுதல் அமைதியான வாழ்க்கைக்கு வழி வகுக்குமென நம்பலாம்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

காலம் சென்ற தொண்டைமானாறு வேலுப்பிள்ளை பொன்னம்பலம் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்
மரணமெய்தியவர்

பொன்னம்பலம் கைம்பெண் அம்பாலிகை தொண்டைமானாறு
மனுதார்

எதிர்

மரணசாதன நியாயாதிக்கம்: இல, 1042

1. வேலுப்பிள்ளை கெங்காதரன்
2. செல்லத்துரை நாகேஸ்வரன்
3. நடராசா கைம்பெண் நாகேஸ்வரி
4. சையல்பாகா செல்வகுரு
5. பெண் இராஜேஸ்வரி
6. சிவப்பிரகாசம் சபாநாயகம்
7. சிவபபிரகாசம் வேலுப்பிள்ளை
8. கந்தசாமி கைம்பெண் அன்னபூரணி அம்மா

எல்லோரும் வல்வெட்டித்துறை எதிர் வாதிகள்

மேலே உள்ள இலக்கங்கொண்ட மரண சாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இததால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறை உள்ள ஆள் எவரும் 1978ம் ஆண்டு ஆனி மாதம் 16ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுணதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறார்,

நீதிமன்ற கட்டளைப்படி

(ஒப்பம்) பதிவாளர்

1978-ம் ஆண்டு வைகாசி மாதம் 18ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

சிவமயம்

# புண்ணியங்களுட் சிறந்தது அகிம்சை

## (அகிம்சை பரமோ தர்மம்)

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்"

மெய்யன்பர்களே !

சைவசமயம் கொல்லாமையையும் கொன்றதைத் தின்னாமையையும் அடிப்படைக் கொள்கைகளாகக் கொண்டுள்ளது. இந்த உண்மையை மக்களுக்கு நாங்கள் வித்தியாசாலைகள்மூலமும் திருக்கோயில்கள்மூலமும் பரப்புதல் வேண்டும். இக்காலத்தில் திருக்கோயில்களில் ஆடு கோழிகளைப் பலியிடுதல் நிகழுகின்றது. இந்த வழக்கத்தை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சைவப் பெரியார் சிவபாதசுந்தரம்பிள்ளை முதலியோர் கண்டித்திருக்கின்றார்கள். அவருடைய போதனைகளைப் பின்பற்றி ஆடு கோழிகளைப் பலியிடுதல் பலகோயில்களில் நிறுத்தப்பட்டது. ஆனால், பலியிடுதல் சில கோயில்களில் இப்பொழுதும் நடக்கின்றது. இது சைவசமயத்திற்கு மிகவும் இழுக்கான பாதகச் செயலாகும். கோயில்களில் பலியிடும் வழக்கத்தை முற்றாக ஒழிப்பதற்குச் சைவப் பெரியார்கள் முயலவேண்டும்.

இஃதிவ்வாறிருக்க, சைவ சமயத்திற்கும் தமிழ் மொழிக்கும் அரணாகவுள்ள வேலணைத் தீவிலே உள்ள பிரபல ஆலயங்களுக்கு ஆடு, கோழி, பசு, எருது முதலிய பிராணிகளைத் தானமாக அன்பர்கள் கொடுக்க, கோவிலதிகாரிகள் அவைகளை இறைச்சிக் கடைக்காரருக்கு விற்கின்றார்கள். கோவில்மூலமாக உயிர்ப்பிராணிகளைக் கொலைசெய்யும் இறைச்சிக் கடைக்காரருக்கு விற்பதும் கொடிய பாதகச் செயலாகும். இந்த வழக்கத்தையும் முற்றாக ஒழித்தற்குச் சைவப் பெரியார்கள் தீவிரமாக முயற்சி எடுக்கவேண்டும்.

இந்த வழக்கத்தைப் பின்வரும் வழிகளினால் ஒழிக்கலாம்:

(I) சைவமக்கள் ஆடு, கோழி, பசு. எருது முதலிய பிராணிகளைக் கோவிலுக்குத் தானமாக வழங்குவதில்லை எனத் தீர்மானஞ் செய்தல் வேண்டும்.

(II) சில சந்தர்ப்பங்களில் நேர்த்திக் கடனாக இந்தப் பிராணிகளை வளர்த்தால், வளர்ப்பவர்கள், அப்பிராணிகளைக் கோவிலுக்குத் தானமாகக் கொடுக்காது, அவைகளின் பெறுமதியைக் கோவில்களுக்கு நன்கொடையாக வழங்கலாம்.

(III) கோவிலதிகாரிகள் எக்காரணம்கொண்டும். ஆடு, கோழி, பசு, எருது முதலிய பிராணிகளைக் கோவிலுக்குத் தானமாக ஏற்பதில்லை எனத் தீர்மானஞ்செய்து அத்தீர்மானத்தை மக்களுக்கு அறிவிக்க வேண்டும். அவைகளின் பெறுமதியை மக்களிடமிருந்து ஏற்றுக் கொள்ளலாம்.

(IV) சைவப் பெரியார்கள், கோவிற் பூசகர்கள் இவ்விதமாக மிருகங்களைக் கோவிலுக்குத் தானஞ் செய்வதை நிறுத்த வேண்டுமெனப் பிரசாரஞ் செய்தல் வேண்டும்.

(V) இத்தீர்மானங்களை உள்ளடக்கிய துண்டுப் பிரசுரங்களைக் கோவிலதிகாரிகள் மக்களிடையே பரப்புதல் வேண்டும்.

"[illegible] விளக்குக உலகமெல்லாம்"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம், 1-6-78.

மு. மயில்வாகனம்
சமயப் பிரசார அமைச்சர்.

## வேலணை நால்வர் திருமடம்

வேலணை நால்வர் மட நிர்வாகத்தைத் திறம்பட நடாத்திச் சைவப் பணி புரிவதற்காக ஒரு நிர்வாக சபை அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவானது.

## உதை பந்து ஆட்டப்போட்டி

அகில இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டப் போட்டி 1978 (2-ம் சுற்று) யாழ் வளாகத்தில் (திருநெல்வேலி) (12-6-78) திங்கள் பிற் பகல் 4 மணிக்கு நிகழும்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி — எதிர் — திருகோணமலை இந்துக்கல்லூரி. பிரவேசம் 50 சதம்.

வியாபாரம் விருத்தியுற விளம்பரம் வேண்டும் !
'இந்து சாதனத்தில்' விளம்பரஞ் செய்து அதிக பயனைப் பெறுங்கள்

## THOUGHTS TO BE TREASURED

*சித்த சங்காரமும், நீடிளைப் பாற்றுதல்*
*வைத்த சங்காரமும், மன்னும் அறுதியிற்*
*சுத்த சங்காரமும், தோயாப் பரனருள்*
*வைத்த சங்காரமும், காலாம் மதிக்கிலே.*

There are four kinds of destruction to be noticed, to wit: the daily destruction or sleep, the interim destruction intended to relieve the soul of its longstanding fatigue, pure or total destruction when the whole universe is absorbed in its original cause and the destruction (of Malam) when the Lord's Grace is implanted in the soul.

We should add here that there are several varieties of interim destruction or *அவாந்தரசங்காரம்,* such as death which takes place at the end of a man's life in this world, *கற்பாந்த சங்காரம்* or destruction at the end of a cycle of thousands of years which form a day of Brahma and destruction at the end of the span of life of a Brahma.

Hindu Organ

Friday, 9th June, 1978.

# FIRST YEAR'S FRUITS

July 22nd. 1978 is fast approaching. The first year of the U. N. P. Government that came to power in an unparalleled performance at the polls on July 21st, 1977 is under review by both supporters and opponents, each group for its own benefit. In between there is the Common Man whose comment is that which ought to count.

How has the ordinary man fared during the period of eleven months just ending? To answer this question the data must be supplied by the Government in the form of statistical information on the implementation of the U. N. P. program of work as enumerated in the party's manifesto of 1977. In other words the Premier and his colleagues in the Cabinet must issue a comprehensive report on their achievements, their failures and their inactivities.

Taking our mind away from political pledges and promises let us analyse the economic situation with particular reference to the plight of the people in everyday life.

The tall talk of reducing the incidence of unemployment cannot be taken all too seriously as it has been the pattern of proclamation by every new Government. However, the U. N. P. Administration must place before the people the particulars of employment granted to the unemployed during the period up to June this year.

Another major question is naturally about the cost of living. What is the present position? Does it justify the several statements of Ministers about proposed measures of relief.

Is the ordinary man able to get his eight grams of cereals? This is question number one in the anti-U. N. P. Quarters. And that too must be answered

How does public opinion stand. We await the Premier's explanation.

## வருகிறார் மதுரைச் சோமு

தமிழகத்தின் பிரபல பாடகரான 'இசைத்தென்றல்' திரு. மதுரைச் சோமு அவர்கள் ஈழம் வருகின்றார், யாழ். புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை சித்தி விநாயகப் பெருமான் திருச்சந்நிதியில் இவரது இன்னிசை நிகழ்ச்சி நடைபெற ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. 12-6-78 இரவு நிகழ்ச்சி இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாகக் கூறுகின்றன.

(க. நி)

## நாவலர் மண்டபத்தில்

சைவ பரிபாலன சபை ஆதரவில் சேக்கிழார்நாயனார் குருபூசை வழமை போலச் சிறப்பாக நிகழும். சபை நாவலர் மண்டபத்தில் முற்பகல் விசேடபூசை ஆராதனை, சேக்கிழார் புராணபடனம் ஆகிய நிகழ்ச்சிகளுடன் ஆரம்பமாகும்.

## திருமுறை தந்த குரவர்

(1, ம் பக்கத்து வளர்ச்சி)

தந்த சேக்கிழார் நாயனாரின் குருபூசையும் பெரிய குறிக்கோளையுடைத்து.

சேக்கிழார் மன்றம் வழமைபோல் எடுக்கும் குருபூசை விழாவின் பெருநோக்கத்தைச் சைவமக்கள் உணர்ந்து இக் குருபூசை (10-6-78) நாளிலே திருத்தொண்டர்கள் எல்லோரையும் ஒருங்கு நினைக்கும் பயனை அடையும் பாக்கியம் பெறப் பணி புரிதல் கடன்.

திருத்தொண்டர் புராணம் பெருங் கடல்போன்றது. அதன் கரை காண்பது அரிய சமய சாதனை ஆகும். எனினும் ஒவ்வோர் பகுதியையாவது செம்மையாகக் கற்றல் போதிய பயன் தரும்.

## Self Criticism and Correction

The procedure of self-examination, self criticism and self correction is absolutely necessary on the part of all individuals and communities if Sri Lanka is to tread the path of Righteousness, Happiness and prosperity - One facet of this wholesome procedure appears to have been summarized in the ancient Latin saying:

"Mea culpa maxima est"

(My share of the blame is the greatest)

This saying and the ideal behind it was taught to me when I was a student at St. Joseph's College, nearly sixty five years (65) ago the very Rev. Father Joseph Perera O. M. I., one of the noblest of human beings, this humble writer has been blessed to come across in this journey of life. No doubt this ancient adage is well known to many.

My perpetual prayer is for the welfare of one and all both in and out of Sri Lanka Let one of the features of the Dharmishta Society or state which is sought to be established take cognizance of the inherent soundness of the above quotations, along with other principles that is a further prayer.

S. SIVASUBRAMANIAM
103/2, Hulftsdorp Street,
Colombo 12.

## Saiva Periyar Centenary Reproduction

# GLORIES OF SHAIVAISM

But there are those who very comfortably say "I have no need for God. I have a conscience, which tells me what is right and what is wrong. I will endeavour to obey it" But, conscience is a myth. What a man calls conscience is nothing other than the decision of his intellect, based on his ideals, knowledge etc. Toere have been persons who at one time hated bribery, but later became ardent votaries of it. So putting in terms of conscience, at one time their conscience disapproved liberty, and at another time approved it. Orthodox meat-eaters have become orthodox vegetarians. i. e. at one time their conscience approved meat-eating and at another time condemned it. Again, we see the conscience of one man approving murder for political purposes and the conscience of another man abhorring it. We thus see that conscience differs in the same man from time to time and in different persons at the same time. Conscience is there-fore altogether undependable. Morality can depend only on religion, and the existence of God has to be admitted for the maintenance of moral life.

Having thus demonstrated the need for the belief in the existence of God. our philosophy says that there can be only one God. We first arrived at the existence of God in our attempt to explain the change the Universe undergoes. God is thus the wielder of the Universe. There cannot be two beings each independently controlling the Universe. So the Veda says, "There is only one God; but sages call Him by different names".

The next teaching of Shaivaism is that we are all souls and that souls are realities A reality cannot come out of nothing, and a reality which is not composite is eternal. The soul is not composite and is therefore eternal.

But there are those who deny the existence of the soul and regard the body as the individual They hold that thinking is done by the nervous system in the brain. But nerves are mere chemical products and are therefore non-intelligent. If a man frequently repeats "7 times 12 is 84" this truth will come to him whenever he wishes to know what 7 times 12 is. But intricate mathematical problems cannot be solved by such habit formations There must, therefore, be something other than the body to do work of this kind. Shaiva philosophy says that which does this is the soul,

But another class of philosophers say that the solution of problems can be done by the mind and that the existence of the soul does not follow from this. In answer to this. Shaiva philosophy says that the mind is only a tool and not the agent. We control our minds in several ways. When the mind is prone to be idle, we sometimes press it to do the work in hand. When it starts a wrong act as a reflex, we mend it. The mind is thus only a tool and not the agent. The agent is what our philosophy calls the soul. Mind and body are its tools.

We also see that our knowledge is very limited. There are phenomena which even the greatest scientist is still unable to explain, We are therefore not omniscient. But, when we see men possessing varying amounts of knowledge, the jungle-dweller having a drop of knowledge, an ordinary graduate a well of knowledge, a professor, a sea of knowledge and a Raman an ocean of knowledge, we have a right to infer that the soul is capable of omniscience. Since men are actually not omniscient, there must be something which keeps down this omniscience. Our philosophy calls this Anava.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press. 450 K. K. S. Road, Vannarponnai, Jaffna on Friday, June 9th, 1978.

EDITOR-IN-CHIEF: R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org